1971 ஜுலை 12]

மதுரை பல்கலைக் கழகத்திடம் இருந்தும் முயற்சி வரட்டும் என்று அரசாங்கம் இருக்கிறது. அதை அமைக்கும் யோசனையை இப்போதைக்கு அரசு ஒத்திவைத்திருக்கிறதே தவிர கைவிடவில்லை.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கனவே அங்கத்தினர் அவர்கள் கூறிய மாதிரி, சட்டம் படித்தவர்கள் எந்தத் துறையிலும் செல்லலாம் என்ற நியதி இருப்பதாலும், சட்டப் படிப்பு தேவை என்று கருதுவதாலும் இதுபற்றி பரிசீலிப்பதற்கு ஒரு கமிட்டியை அமைத்து நன்மை தீமைகளை ஆராய அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தனிக் கமிட்டி அமைக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. நான் முதலிலேயே சொன்னபடி இதிலுள்ள கூறுகளையெல்லாம் ஆராய்ந்தறிந்து தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே பகல் நேரக் கல்லூரி, மாலைநேரக் கல்லூரி இருக்கிற காரணத்தினால் சென்னையில் பணியாற்றக்கூடியவர்களுக்குத்தான் படிக்கக்கூடிய வசதிப்பு ஏற்படுகிறது. வட மாநிலங்களிலே எல்.எல்.பி. போன்ற பட்டம் போஸ்டல் ட்யூஷன் மூலமாகவே சொல்லித் தருகிறார்கள். அதுபோல நம்முடைய மாநிலத்திலேயும் போஸ்டல் மூலமாக சட்டப் படிப்பு சொல்லித்தர ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கடிதப் போக்குவரத்தின் மூலம் பட்டப் படிப்பு சொல்லிக் கொடுப்பதை சென்னைப் பல்கலைக் கழகம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. அம்மாதிரி கடிதப் போக்குவரத்தின் மூலம் பட்டப் படிப்பு சொல்லிக் கொடுக்கும் சூழ்நிலை ஏற்படுமானால் சட்டப் படிப்பைப் பொறுத்தவரையிலும் தக்க முடிவு எடுத்துக் கொள்ளப்படும். மதுரைப் பல்கலைக் கழகத்தில் இந்த ஆண்டிலிருந்து கடிதப் போக்குவரத்து மூலம் பட்டப் படிப்பை ஆரம்பிக்கலாம் என்று இருக்கிறோம். அந்தச் சூழ்நிலையை ஆராய்ந்தறிந்துதான் மற்றவைகளைப் பற்றி முடிவு எடுக்கவேண்டும்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, கிராமாந்திரங்களில் டாக்டர் பட்டப் படிப்பு படித்தவர்கள் அரிதாக இருக்கிற காரணத்தினால், டாக்டர் படிப்பு முடித்தவுடன் கட்டாயமாக இரண்டு ஆண்டுகள் கிராமங்களில் பணியாற்ற வேண்டுமென்று அரசு ஏற்பாடு செய்யுமா?

(பதில் இல்லை).

Rural Development.

*194 Q.—Thiru T. GANAPATHY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the Government propose to take steps for istensifying the tempo of Rural Development through the Community Project administration?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கிராம வளர்ச்சிக்கென சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அதிக நிதி ஒதுக்கப்படவேண்டும் என உறுப்பினர் விரும்புகிறார் என கருதப்படுகிறது. அப்படியானால் இதற்கு விடை

'ஆம்' என்பதாகும். இந்த அரசு கிராமப் பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்து அதற்காக எல்லா வளர்ச்சித் தலைப்புகளின் கீழும் பெருமளவு நிதி ஒதுக்கம் செய்துள்ளது. சமுதாய வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டதன் விளைவாக ஒரு வட்டாரம் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் I ஆம் நிலை, II ஆம் நிலையில் இருப்பினும் அல்லது II ஆம் நிலைக்குப் மேம்பட்டு இருப்பினும், வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கத்தைப் பொறுத்தவரையில் எல்லா வட்டங்களும் ஒரே அளவில் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது.

திரு. டி. கணபதி: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் வள்ளியூர், நாங்குனேரி, இராதாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் பஞ்சப் பிரதேசமாக இருப்பதால், அவைகளுக்குக் கூடுதலான நிதி ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தனிக் கேள்வி போடவும்.

Conference of Employees of Panchayat Unions

* 195 *Q.*—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether a conference of Employees of Panchayat Unions was held on 1-5-1971 at Madurai; and

(*b*) whether the resolutions passed at the conference were communicated to the Government; and

(*c*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:

(அ) ஆம்;

(இ) ஆம்;

(உ) அவை அரசின் பரிசிலனையிலுள்ளன.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றும் ஊழியர்கள் சுமார் 15 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சம்பள விகிதத்தை உயர்த்த வேண்டுமென்றும், தங்களை உள்ளாட்சித் துறையின் கீழ் நேரடியாகக் கொண்டுவர வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். நிர்வாக சீரமைப்புக் குழுவில் அவர்களுடைய விஷயங்களையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறதா? எந்தெந்த விஷயங்களில் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கைக்கு வரப்பெற்று, ஊர் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, அதுபற்றி கருத்துக்கள் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அதுபற்றி யோசிக்க வேண்டும். சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்பதைக் குறித்து நிதித் துறை ஆராய்ந்து அனுப்ப வேண்டியிருக்கிறது. மற்றொரு கோரிக்கை அவர்களை வருவாய்த் துறையிலிருந்து பிரித்து, உள்ளாட்சித் துறையின்கீழ் கொண்டுவர வேண்டுமென்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தைப்